# WAR CRIMES



# போர்க் குற்றங்கள்

# முன்னுரை

தமிழர்களின் அரசியலில் இன்று சில சொற்பிரயோகங்கள் பயன்பாட்டில் உள்ளன. ஓம் - நீங்கள் ஊடகங்கள் வாயிலாக அறிந்துகொண்டிருக்கும் போர்க்குற்றங்களுக்கும், இனப்படுகொலைகளுக்கும் எதிரான சட்ட நடவடிக்கைகளும், விசாரணைகளுமாகும். உண்மையில் இவை சார்ந்த விடயங்களை உற்று நோக்கி, ஆராய்ந்து அறிபவர்களைத் தவிர, ஏனையோருக்கு இவ் விடயங்கள் புரியாதவையாகவே உள்ளன. காரணம் இவை முற்று முழுதாக சட்டவியலை மையப்படுத்தி உள்ளமையேயாகும்.

போர் என்பதே குற்றம். அப்படியானால் போர்க்குற்றம் என்பது யாது? ஒரு நாடு போர் புரிவதற்குக் கூட சட்டதிட்டங்கள் உள்ளனவா? அச் சட்டங்கள் யாவை? சிறீலங்கா அரசு மீறியுள்ள அனைத்துலக போரியல் சட்ட திட்டங்கள் எவை? எதன் அடிப்படையில் தமிழர்கள் வழக்குகளைத் தொடுத்துள்ளனர்? என்ற உங்களது அனைத்து வகையான வினாக்களுக்கும் சுவிஸ் ஈழத்தமிழரவையும், அனைத்துலகத் தமிழ்ப் பெண்கள் அமைப்பும் இணைந்து, இக் கைநூல் ஊடாக கருத்துத் தெளிவாக்கம் அளிக்கின்றனர்.

அனைத்துலக குற்றவியல் நீதிமன்றம் மற்றும் ஐரோப்பிய மனித உரிமை நீதிமன்றங்களில் இரண்டு வழக்குகளைத் தாக்கல் செய்த அனுபவங்களினூடாக இக் கைநூலை அனைத்து மக்களும் வாசித்து தெளிவடைய வேண்டும் என்பதற்காக வெளியிடுகிறோம்.

இக் கைநூல் பற்றிய உங்களது ஆக்கபூர்வமான கருத்துக்களை எதிர்பார்த்திருக்கின்றோம்.

நன்றி
சுவிஸ் ஈழத்தமிழரவை (E-mail: info@scet.ch)
அனைத்துலகத் தமிழ்ப் பெண்கள் அமைப்பு.





# WAR CRIMES

War crimes are serious violations of the laws of war, also known as International Humanitarian Law (IHL). This is the body of international law governing the conduct of international and non international armed conflict. Under the laws of war, certain violations are considered so serious as to give rise to individual criminal responsibility, both domestically and at the international level. War crimes typically include serious violations of the laws of war aimed at protecting persons who are not or are no longer participating in the hostilities and of rules that restrict the means and methods of warfare.



# போர்க் குற்றங்கள்

போர் விதிமுறை அல்லது அனைத்துலக மனிதாபிமானச் சட்டத்திற்கு முரணாக செயற்படுவதே போர்க்குற்றங்களாகும். மேலும் நாட்டிற்குள்ளும், அனைத்துலக ரீதியிலும் ஆயுதப் போராட்டங்கள் தொடர்பான அனைத்துலகச் சட்டங்கள் எனலாம். இவ்விதிகளின் படி சில மீறல்கள் மிகவும் பாரதூரமானவை. அப்படி மீறுபவர்கள் உள்ளூரிலும், அனைத்துலக மட்டத்திலும் அக்குற்றங்களுக்கு அவர்களே பொறுப்பாகின்றனர். போரில் ஈடுபடாதவர்கள் அல்லது போரில் தொடர்ந்தும் ஈடுபடாதவர்களைப் பாதுகாப்பதற்காக இவை இயற்றப்பட்டன.

# What are crimes against humanity?

## மானுடத்துக்கு எதிரான குற்றங்கள் எவை?

Under the Rome Statute, a crime against humanity is any of the following acts when committed as part of a widespread or systematic attack directed against any civilian population, with knowledge of the attack:

பொதுமக்களைக் குறிவைத்து நடத்தப்படும் - பரவலாக அல்லது திட்டமிட்டு, தெரிந்து கொண்டே தாக்குதல், மனித குலத்துக்கு எதிரான குற்றமாகும். அவையாவன:



a. Murder; கொலை.

b. Extermination; முழுமையாக அழித்தொழித்தல்.

c. Enslavement; அடிமைப்படுத்துதல்.

d. Deportation or forcible transfer of population; நாடு கடத்தல் அல்லது மக்களை வலிந்து வெளியேற்றுதல்.

e. Imprisonment or other severe deprivation of physical liberty in violation of fundamental rules of international law; அனைத்துலகச் சட்டத்துக்கு முரணாக சிறை செய்தல்.

f. Torture; defines as "any act by which severe pain or suffering, whether physical or mental, is intentionally inflicted on a person for such purposes as obtaining from him or a third person information or a confession, punishing him for an act he or a third person has committed or is suspected of having committed, or intimidating or coercing him or a third person, or for any reason based on discrimination of any kind, when such pain or suffering is inflicted by or at the instigation of or with the consent or acquiescence of a public official or other person acting in an official capacity. It does not include pain or suffering arising only from, inherent in or incidental to lawful sanctions." ஒருவரை வேண்டுமென்றே உடல், உளரீதியாக கடுமையாக துன்புறுத்துதல், அதன் மூலம் அவரிடமோ மூன்றாமவரிடமோ தகவல் அல்லது ஒப்புதல் வாக்குமூலம் பெறுவது, அவரோ அல்லது இன்னொருவரோ செய்த அல்லது செய்ததாக சந்தேகத்தில் தண்டிப்பது, அச்சுறுத்தியோ கட்டாயப்படுத்தியோ அல்லது வேறு வழியிலோ அவர்களை வேதனைப்படுத்துதல், ஒரு அதிகாரியோ அல்லது அவரது தூண்டுதலினால் செய்வதும் ரோமாபுரியில் ஏற்றுகொண்ட சட்டத்தின் படி (Rome statute) சித்திரவதையாகும். அதேபோல் சட்ட நடவடிக்கையினால் ஏற்படக்கூடிய துன்பம் அல்லது வேதனையும் இதனுள் அடங்கும்.

g. Rape, sexual slavery, enforced prostitution, forced pregnancy, enforced sterilization, or any other form of sexual violence of comparable gravity; பாலியல் வன்புணர்வு, பாலியல் நோக்குடன் அடிமைப்படுத்துதல், கட்டாய பாலியல் தொழில், வலிந்து கர்ப்பமாக்குதல், கட்டாய இனவிருத்தியை மேற்கொள்ளல்.

h. Persecution against any identified able group or collectivist on political, racial, national, ethnic, cultural, religious, gender…, or other grounds that are universally recognized as impermissible under international law, in connection with any act referred to in this paragraph or any other crime within the jurisdiction of the Court; அரசியல், இன, தேசிய கலாச்சார, மத, பால் அல்லது வேறு வழியில் அடையாளம் காணப்பட்ட குழுக்களுக்கு எதிரான அட்டூழியமான அடக்குமுறைகள்.

i. Enforced disappearance of persons; (வலுக்கட்டாயமாக) மக்களை காணாமல்போகச் செய்தல்.

j. The crime of apartheid; இனவேற்றுமைக் குற்றம்.

k. Other inhumane acts of a similar character intentionally causing great suffering, or serious injury to body or to mental or physical health. வேண்டுமென்றே மனிதத்தன்மையற்ற முறையில் உடல், உள ஆரோக்கியத்திற்கு பாரிய சேதம் ஏற்படுத்துதல்.



# Which violations of the laws of war governing non-international armed conflicts are war crimes?

## ஒரு நாட்டிற்குள் ஆயுதப் போராட்டங்களில் ஈடுபடும் போது எந்த வகைச் செயற்பாடுகள் போர் குற்றங்களாக கணிக்கப்படுகின்றன?

The following acts committed against persons taking no active part in the hostilities, including members of armed forces who have laid down their arms and those placed hors de combat by sickness, wounds, detention or any other cause:

போர் நடவடிக்கையில் தீவிர பங்கேற்காதவர்கள், ஆயுதங்களைக் கைவிட்டவர்கள் அல்லது காயப்பட்டோ, சுகவீனமுற்றோ தடுத்து வைக்கப்படுவதால் அல்லது வேறு காரணங்களுக்காக போர் நடவடிக்கைகளில் பங்கேற்காதவர்களுக்கு எதிரான சில செயற்பாடுகளும் போர் குற்றங்களாகும். அவையாவன:

i. Violence to life and person, in particular murder of all kinds, injure, cruel treatment and torture; கொடூரமாக செயற்பட்டு, உயிர், உடலுக்கு எதிரான வன்முறைகள் - அனைத்து விதமான கொலைகள், காயப்படுத்துதல், மற்றும் சித்திரவதை.

ii. Committing outrages upon personal dignity, in particular humiliating and degrading treatment; ஒருவரின் சுயமரியாதையை இழிவு படுத்துதல் குறிப்பாக சிறுமைப் படுத்தி தொடர்ந்து தீங்கிழைத்தல்.

iii. Taking of hostages; பணயக் கைதிகளை வைத்திருத்தல்.

iv. The passing of sentences and the carrying-out of executions without previous judgement pronounced by a regularly constituted court, affording all judicial guarantees which are generally recognized as vital; தகுந்த முறையில் அமைக்கப்படாத ஒரு நீதிமன்றத்தால், உரிய முறையில் விசாரணையின்றி, சம்மந்தப்பட்டவருக்கு அவரது குற்றம் தொடர்பான விளக்கம் கொடுக்காது, தண்டனை அல்லது மரண தண்டனை என்பனவற்றை வழங்கி, அதனை நிறைவேற்றுவது.

v. Intentionally directing attacks against the civilian population as such or against individual civilians not taking direct part in hostilities; பொதுமக்களை நோக்கி வேண்டுமென்றே திட்டமிட்டுத் தாக்குதல் அல்லது போர் நடவடிக்கைகளில் நேரடியாக ஈடுபடாத தனி நபருக்கு எதிரான தாக்குதல்கள்.

vi. Intentionally directing attacks against buildings, material, medical units and transport, and personnel using the distinctive emblems of the Geneva Conventions in conformity with international law; சர்வதேச சட்டங்களுக்கு அமைய ஜெனிவா மாநாடுகளில் தீர்மானித்த அடையாள சின்னங்களைக்கொண்ட கட்டிடங்கள், பொருட்கள் மருத்துவத்தொகுதிகள், போக்குவரத்துச் சாதனங்கள், பணியாளர்கள் மேல் வேண்டுமென்றே திட்டமிட்டுத் தாக்குதல்.

vii. Intentionally directing attacks against personnel, installations, material, units or vehicles involved in a humanitarian assistance or peacekeeping mission in accordance with the Charter of the

United Nations, as long as they are entitled to the protection given to civilians or civilian objects under the international law of armed conflict; ஐக்கிய நாடுகள் சாசனப்படி மனித நேயப்பணிகள் அல்லது அமைதி காக்கும் பணிகளில் ஈடுபடும் தொண்டர்கள் மற்றும் ஈடுபடுத்தப்படும் பொருட்கள் வாகனங்கள் ஆகியவற்றை வேண்டும் என்றே தாக்குதல்.

viii. Intentionally directing attacks against buildings dedicated to religion, education, art, science or charitable purposes, historic monuments, hospitals and places where the sick and wounded are collected, provided they are not military objectives; படைத்துறை அல்லாத மதம், கல்வி, விஞ்ஞானம், தரும காரியங்கள் தொடர்பான கட்டிடங்கள், வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நினைவுச்சின்னங்கள், மருத்துவமனைகள், நோயாளிகள், காயப்பட்டோர் கூடியிருக்கும் இடங்களைத் திட்டமிட்டுத் தாக்குதல்.

ix. Raiding a town or place, even when taken by assault; போரிட்டுக் கைப்பற்றிய நகரங்களைச் சூறையாடல்.

x. Committing rape, sexual slavery, enforced prostitution, forced pregnancy,..., enforced sterilization, and any other form of sexual violence also constituting a serious violation of article 3 common to the four Geneva Conventions; பாலியல் வன்புணர்வு, பாலியல் நோக்குடன் அடிமைப்படுத்துதல், கட்டாய பாலியல் தொழில், வலிந்து கர்ப்பமாக்குதல், கட்டாய இனவிருத்தியை மேற்கொள்ளல்.

xi. Ordering the displacement of the civilian population for reasons related to the conflict, unless the security of the civilians involved or imperative military reasons so demand; பொது மக்களின் பாதுகாப்பிற்கு பாதிப்பு ஏற்படாத பொழுது அல்லது பொதுமக்களை போரைக் காரணம் காட்டி இடம்பெயரச் செய்தல்.

xii. Killing or wounding treacherously a combatant adversary; போரில் ஈடுபடுபவரை வஞ்சகமாகக் கொலை செய்வது அல்லது காயப் படுத்துவது.

xiii. Declaring that no quarter will be given; பிடிபடுபவர்களை விடுவிக்க முடியாது என அதிகாரபூர்வமாக அறிவித்தல்.

xiv. Subjecting persons who are in the power of another party to the conflict to physical mutilation or to medical or scientific experiments of any kind which are neither justified by the medical, dental or hospital treatment of the person concerned nor carried out in his or her interest, and which cause death to or seriously endanger the health of such person or persons; இன்னொருவரின் அதிகாரத்துக்கு உட்படுபவர்களை, அவர்களது நலன் தொடர்பில்லாத வேறு காரணங்களுக்காக வைத்திய, விஞ்ஞான ஆய்வுகளுக்கு உட்படுத்துவது, அவர்களின் உடல் உறுப்புக்களை சேதமாக்குதல்.

xv. Destroying or seizing the property of an adversary unless such destruction or seizure be imperatively demanded by the necessities of the conflict; போருக்கு அவசியமில்லாத போது எதிரியின் உடைமைகளை அபகரிப்பது அல்லது அழித்தல்.



# Enforced disappearance

## (வலுக்கட்டாயமாக) காணாமற்போகச் செய்தல்

Enforced Disappearance is defined as “the arrest, detention, abduction or any other form of deprivation of liberty by agents of the State or by persons or groups of persons acting with the authorization, support or acquiescence of the State, followed by a refusal to acknowledge the deprivation of liberty or by concealment of the fate or whereabouts of the disappeared person, which place such a person outside the protection of the law.”

It should be noted that many States do not include in their criminal codes a crime of “enforced disappearance” as such. In these States, enforced disappearances might be prosecuted as unlawful detention or arbitrary arrest and detention. It is thus important, when considering the scope of a proposed amnesty, to ensure that the proposed law does not prevent States from punishing enforced disappearances by including in the proposed amnesty crimes that appear to be ordinary crimes but which in fact, under relevant national law, provide the principal basis for prosecuting the crime of enforced disappearance.

ஒரு அரசாங்க அதிகாரி அல்லது அரசாங்கத்தின் அனுமதியுடன் ஒருவரைச் சிறைப் படுத்துதல், தடுத்து வைத்தல், ஆட்கடத்தல் அல்லது வேறு விதத்தில் ஒருவரின் சுதந்திரத்தைப் பறித்தல். அதன் பின், அதை ஏற்றுக்கொள்ள மறுத்தல் அல்லது காணாமல் போனோர் பற்றிய விபரத்தை மறைத்தல். இது (வலுக்கட்டாயமாக) காணாமல் போகச் செய்தலாகும். பல நாடுகளின் குற்றவியல் தொகுப்பில் இதனைச் சேர்த்துக்கொள்ளவில்லை. ஆனால் அந்த நாடுகளில் இதனை சட்டத்திற்கு மாறாக தடுத்துவைத்தல் அல்லது சட்ட வரம்புகளுக்கு அப்பாற்பட்ட கைதும் தடுத்துவைப்பும் என்று வழக்குத்தொடர முடியும். ஆகவே மன்னிப்பு கொடுப்பது பற்றி ஆலோசிக்கும் போது – (வலுக்கட்டாயமாக) காணாமல் போகச்செய்தல் என்ற சட்டத்தின் அடிப்படையிலேயே ஆராயப்பட வேண்டும்.

# Crimes of War: Glossary of Terms

## போர்க்குற்றம்: சொற்களஞ்சியம்

Additional Protocols of the Geneva Conventions: Articles that were added to the original text of this important convention that is the basis for international humanitarian law; அனைத்துலக மனிதாபிமான சட்டத்திற்கான சட்ட மூலத்துடன் சேர்த்துக்கொள்ளப்பட்ட இணைப்புக்கள்.

Apartheid: An official policy of racial segregation formerly practiced in the Republic of South Africa that involves political, legal, and economic discrimination against non-whites; தீண்டாமை/இனவேற்றுமை – தென் ஆபிரிக்க குடியரசில் முன்பு நடைமுறையில் இருந்த அரசியல் பொருளாராத சட்ட அடிப்படையின் பாகுபாடு.

Ariel area bombing or carpet bombing: A method of utilizing conventional shells from the air to bombard a large area of land. Because bombs are dropped from planes, it is nearly impossible to distinguish between civilian and military targets; ஆகாயத்தில் இருந்து பரந்த இடத்தில் குண்டு வீசுதல். விமானத்தில் இருந்து வீசப்படுவதால் பொது மக்களுக்கும் போரில் ஈடுபடுவோருக்கும் வித்தியாசம் கண்டுகொள்ள முடியாது.

Biological weapon: Any pathogen (germ, bacteria or virus) used during war to kill or incapacitate an enemy; உயிரியப் போர்க் கருவியை (நோய் உண்டாக்கும் கிருமிகள்) போரில் பயன்படுத்தி எதிரிகளை கொல்லுதல் அல்லது வலு இழக்க செய்தல்.

Casualties: Any deaths, injuries, or damage to infrastructure suffered during war; போர்க் காலத்தில் ஏற்படக்கூடிய இறப்பு, காயங்கள் மற்றும் சமூக உட்கட்டமைப்புகளுக்கு ஏற்படக்கூடிய பாதிப்புகள்.

Chemical weapons: A chemical substance with toxic properties used during armed conflict to kill, injure, or incapacitate an enemy; போர்க்

காலத்தில் எதிரியை கொல்ல, காயப்படுத்த அல்லது வலுவிழக்க செய்ய பாவிக்கும் நச்சுத்தன்மை உள்ள இரசாயனப் பொருட்கள்.

Civilian immunity: The protection from violence and persecution granted to civilians because of their status as "civilian"; ''பொதுமக்கள்'' என்ற தகுதிக்காக அவர்களை வன்முறை மற்றும் அடக்குமுறை ஆகியவற்றில் இருந்து பாதுகாப்பது.

Civilians: A group of people designated as non-combatants, and therefore afforded different protection under international humanitarian law; போரில் ஈடுபடாதவர்கள். சர்வதேச சட்டங்களின் படி இவர்கள் வித்தியாசமான/மாறுபட்ட பாதுகாப்புக்குரியவர்கள்.

Cluster bombs: A shell that is dropped from an airplane and breaks into bomblets upon impact with the ground or a target. Due to technical inadequacy, a high percentage of those bomblets don't explode upon impact and remain un triggered until touched by a foot, car or agricultural tool; விமானத்தில் இருந்து வீசப்படும் இக் குண்டுகள் பலவாகப் பிரிந்து நிலத்தை/இலக்கை தாக்கும் தன்மை கொண்டவை. ஆனால் அச்சிறு குண்டுகள் எல்லாமே வெடிப்பதில்லை. சில வெடிக்காமல் பின்னர் கை, கால் பட்டு அல்லது வாகனத்தில் பட்டு அல்லது விவசாய ஆயுதங்களில் தட்டுப்பட்டு வெடிக்கக்கூடியவை.

Collateral damage: Damage to civilian infrastructure or loss of civilian life that is deemed necessary (and therefore legal) to succeed in war; பொது மக்களின் உட்கட்டமைப்புகளுக்கு ஏற்படக்கூடிய பாதிப்புகள் மற்றும் மரணங்கள் போரில் வெற்றி அடைவதற்கு அவசியமானதென்று (அதனால் சட்டப்படியானதென) கருதப்படுகிறது.

Combatants: A category of persons during wartime who are recognizable as members of an armed party to conflict. Separate rules apply to combatants and civilians; போர்க் காலத்தில் சண்டையில் ஈடுபடுபவர்கள் என அடையாளம் கொள்ளப்படும் நபர்கள். இவர்களுக்கும் சாதாரண மக்களுக்கும் வெவ்வேறு விதிகள் உள்ளன.

Concentration camps: Areas where civilians are taken and held against their will by an opposing armed party to a conflict. In addition to depriving civilians of their freedom, concentration camps often involve abuses like rape, torture, and genocide; எதிரி

ஆயுதபாணிகளால் பிடிக்கப்பட்டு - தமது விருப்பத்திற்கு மாறாக மக்கள் தடுத்து வைக்கப்படும் ஒரு முகாம். அவர்களுடைய சுதந்திரம் மாத்திரம் பறிக்கப்படுவதில்லை. இங்கு பாலியல் வல்லுறவு, சித்திரவதை, இனப்படுகொலைகளும் நடைபெறலாம்.

Convention against Torture and Other Cruel, Inhumane or Degrading Treatment or Punishment: A U.N. treaty to prevent torture. The convention requires states to take effective measures to prevent torture within their borders, and forbids states to return people to their home country if there is reason to believe they will be tortured. UNCAT came into force in 1987; இது சித்திரவதைகளைத் தவிர்ப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தம். இதன்படி சகல நாடுகளும் தமது நாடுகளில் சித்திரவதையை தவிர்ப்பதற்கான நடவடிக்கையெடுக்க வேண்டும். அத்தோடு வெளிநாட்டவரை அவர்களுடைய சொந்த நாடுகளில், அம்மக்கள் சித்திரவதைக்கு உள்ளாவார்கள் எனத் தெரிந்தால் அம்மக்களை திருப்பி அனுப்புவது தடைசெய்யப்பட்டுள்ளது. UNCAT என்ற அமைப்பு 1987 ல் நடைமுறைக்கு வந்தது.

Convention for the Prevention and Punishment of the Crime of Genocide (Genocide Convention): A U.N. treaty that defines and outlaws genocide. Currently 137 countries have ratified the convention. All participating countries are required to prevent and punish actions of genocide in war and peacetime. The convention entered into force in 1951; இது இன ஒழிப்பை தெளிவு படுத்தும் ஒப்பந்தம். இதுவே இன ஒழிப்பை தடை செய்கின்றது. இப்போது 137 நாடுகளில் இதனை ஏற்றுக்கொண்டுள்ளனர். இதில் பங்கு பற்றும் சகல நாடுகளும் இன ஒழிப்பை தவிர்க்கவும், யுத்த காலத்திலும் சமாதான காலத்திலும் இவற்றை தண்டிக்க வேண்டுமென இந்த ஒப்பந்தம் 1951 ஆம் ஆண்டு நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டது.

Convention on the Rights of the Child (CRC): A United Nations convention outlining the civil, political, economic, social and cultural rights of children. It entered into force in 1990. Most member states have ratified the CRC, although the U.S. is an exception; குழந்தைகளின் உரிமைக்கான ஒப்பந்தம். ஐக்கிய நாடுகள் சபையின் இந்த ஒப்பந்தத்தில் குழந்தைகளின் குடியியல், அரசியல், பொருளாதார, சமுதாய மற்றும் பண்பாட்டு உரிமைகள் பற்றிய விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. இந்த ஒப்பந்தம் 1990ம் ஆண்டு நடைமுறைப் படுத்தப்பட்டது. இந்த ஒப்பந்தத்தில் ஐக்கிய

அமெரிக்காவைத் தவிர்த்து கூடுதலான உறுப்புரிமை அரசுகள் ஒப்புதலளித்துள்ளன.

Crimes of war: Acts which are illegal and punishable under international humanitarian law; அனைத்துலக மனித நேய சட்டத்தின் கீழ் தண்டிக்கப்பட வேண்டிய மற்றும் சட்டவிரோதமான செயல்கள்.

Deportation: The pressured or forced evacuation of civilians from their home or home country to a foreign state; நாடுகடத்தல் – ஒரு நாட்டில் குடி உரிமை பெற்ற மக்களை அவர்கள் தாய்நாட்டில் இருந்து வெளி நாடுகளுக்கு கட்டாய வெளியேற்றம் செய்தல்.

“Disappearances”: A euphemism for politically motivated murders. Since those arranging for the disappearances are government officials, perpetrators are rarely brought to justice; காணாமல் போகச் செய்தல் – அரசியல் நோக்கத்துடன் செய்யப்படும் கொலைகளே இதற்கு தூண்டுதலாகவுள்ளது. இந்தச் செயலை அரச அதிகாரிகளே ஒழுங்கு செய்வதால், ஈடுபடுபவர்கள் கூடுதலாக சட்டத்திற்கு முன் கொண்டுவரப்படுவதில்லை.

Ethnic cleansing: The attempt by one party to eradicate in part or in full a community of ethnically similar people; இனக்கருவறுப்பு – ஒரு குழுவினர் இன ரீதியாக ஒரேமாதிரியான மக்களைக் கொண்ட ஒரு சமூகத்தை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ அடியோடு அழிக்க முயற்சிப்பது.

Geneva Conventions: The Geneva Conventions consist of four treaties formulated in Geneva, Switzerland, that set the standards for international law for humanitarian concerns. They chiefly concern the treatment of non combatants and prisoners of war. The adoption of the first Convention followed the foundation of the International Committee of the Red Cross in 1863. As of August 2006, the conventions had been ratified by 194 countries; ஜெனிவா ஒப்பந்தம் – நான்கு உடன்பாடுகளைக் கொண்டுள்ள இந்த ஒப்பந்தம், ஜெனிவா, சுவிஸ்லாந்தில் அனைத்துலக மனித நேய சட்டத்தின் தரத்திற்கமைய அமைக்கப்பட்டது. போரில் ஈடுபடாதவர்களின் மற்றும் சிறைக்கைதிகள் போன்றவர்களை கையாளும் விதத்தையே முக்கியமாக கொண்டுள்ளது. அனைத்துலக செஞ்சிலுவைச் சங்கத்தால் 1863ம் ஆண்டு முதல் ஒப்பந்தம்

கைச்சாத்திடப்பட்டது. ஓகஸ்ட் 2006 முதல் 194 நாடுகளால் இந்த ஒப்பந்தம் ஒப்புதலளிக்கப்பட்டுள்ளது.

Genocidaires: Persons who are responsible for planning or committing acts of genocide (French term); இன அழிப்பு செயல்களை செயற்படுத்துபவர் அல்லது அதற்காகத் திட்டமிடுபவர் (பிரெஞ்சுச் சொல்).

Hors de combat: A French term used in international law that translates as, "out of the fight." It refers to soldiers who are incapable of performing their military function; அனைத்துலகச் சட்டத்தில் பாவிக்கப்படும் ஒரு பிரெஞ்சுச் சொல். "சண்டையில் இருந்து வெளியேற்றல்" - இராணுவ செயற்பாடுகளை செயலாற்ற முடியாத ஒரு இராணுவ வீரரைக் குறிக்கும்.

Humanitarian aid: Food, water, and necessary supplies that are brought to war-torn areas and countries by third parties, such as neutral countries or relief organizations which specialize in helping civilians during conflict; மனித நேய உதவி - பொது மக்களுக்கு உதவுவதற்காக சிறப்பான மனித நேய உதவி அமைப்புக்களால் வழங்கப்படும் உணவு மற்றும் தண்ணீர் போன்ற அத்தியாவசிய பொருட்கள்.

Humanitarian intervention: A term used to describe when a state or group of states employs military force within another country's territory to protect civilians from atrocities, such as civil war, starvation or genocide; ஒரு அரசோ அல்லது அரச குழுக்களோ அவர்களது இராணுவப் படைகளை, இன்னொரு உள்நாட்டுப்போருக்கு, பட்டினி அல்லது இன அழிப்பில் இருந்து மக்களைக் பாதுகாக்க அந்த நாட்டு எல்லைக்குள் அனுப்புவது.

International community: A political term used in international humanitarian law to describe countries that are members of the United Nations or that are states parties to a treaty or convention; ஐக்கிய நாடுகள் சபையின் உறுப்புரிமை பெற்ற அல்லது ஒப்பந்தத்தின் கீழ் உள்ள நாடுகளை குறிக்க, சர்வதேச மனிதநேயச் சட்டத்தில் பாவிக்கப்படும் ஒரு அரசியற் சொல்.

Internal conflict: A conflict between two factions within one state. Generally this categorization of a conflict delays international

intervention and its treatment more nebulous under international humanitarian law; உள் நாட்டு முரண்பாடு - ஒரு நாட்டுக்குள் இரண்டு பகுதியினருக்கிடையில் உள்ள முரண்பாடு.

International Court of Justice: The principal judicial organ of the United Nations. Located in The Hague, the Netherlands, it was established in June 1945 by the Charter of the United Nations. ஐ.நா வின் நீதித்துறை சார்ந்த அமைப்பு. நெதர்லாண்ட், "த ஹோக்" கில் அமைந்துள்ளது. ஐ.நா வின் உரிமைச்சாசனத்தால் 1945ம் ஆண்டு யூன் மாதம் கட்டமைக்கப்பட்டது.

International Criminal Court (ICC): An independent, permanent court that tries persons accused of the most serious crimes of international concern, namely genocide, crimes against humanity and war crimes. The ICC is based on a treaty, joined by 104 countries. The ICC is a court of last resort. The jurisdiction and functioning of the ICC are governed by the Rome Statute; அனைத்துலக குற்றவியலின் அடிப்படையில் போர்க் குற்றங்கள், மனித இனத்துக்கு எதிரான குற்றங்கள் மற்றும் இன அழிப்பு போன்ற கடுமையான குற்றங்களில் ஈடுபடுபவர்களுக்கான சுயாதீன நிரந்தர சட்டமன்றம். இது 104 அங்கத்துவ நாடுகளின் உடன்பாட்டைக் கொண்டு அமைக்கப்பட்டது. இந்த சட்டமன்றத்தின் தீர்ப்பே கடைசி முடிவாகும். இதில் ரோமாபுரி சட்டத்திற்கு அமையவே தீர்ப்புகள் வழங்கப்படுகின்றன.

International humanitarian law (IHL): The law of war that is outlined in the Geneva Conventions and other documents. It defines the conduct and responsibilities of nations and individuals engaged in warfare. IHL seeks to protect civilians from aggression; அனைத்துலக மனிதநேயச் சட்டம் - ஜெனிவா ஒப்பந்தத்தின் கீழ் போடப்பட்ட போர் சார்ந்த சட்டம். இந்தச் சட்ட ஒழுங்கினை மதிப்பது சண்டையில் ஈடுபடும் தனிநபரினதும் அரசினதும் பொறுப்பாகும். பொது மக்களை தாக்குதல்களில் இருந்து பாதுகாப்பதே இதன் நோக்கமாகும்.

International Treaty to Ban Landmines: An international agreement that bans antipersonnel landmines. The official title is "Convention on the Prohibition of the Use, Stockpiling, Production and Transfer or Anti-Personnel Mines and on Their Destruction" and the treaty is also known as the Landmine Treaty or the Ottawa Convention;

நிலக்கண்ணி வெடிகளைத் தடை செய்யும் சர்வதேச உடன்பாடு. இது ஒட்டோவா ஒப்பந்த உடன்பாடு என்றும் கூறப்படுகிறது.

Landmines: An explosive device that is designed to be placed onto or into the ground, and is triggered by the weight of a vehicle, person or animal. Anti-personnel landmines are prohibited by international law because they are nearly impossible to remove and have proven to be detrimental to civilian populations; நிலக் கண்ணிவெடிகள் - அனைத்துலகத் தடைச்சட்டத்திற்கு அமைய, நிலக் கண்ணிவெடிகளை மனிதர்களைக் கொல்வதற்காகவோ அல்லது காயப் படுத்துவதற்காகவோ பயன்படுத்துவது தடை செய்யப்பட்டுள்ளது. இவை மக்களுக்கு தீங்கு செய்யக்கூடியவை என்பது உறுதிப்படுத்தப் பட்டுள்ளதும், இவற்றை அகற்றுவது கடினமானது என்பதுவுமே தடைக்குக் காரணமாகும்.

Military objective: The object of an armed attack during wartime; போர்காலத்தில் ஆயுதம் தாங்கியவர்களால் குறி வைத்து தாக்கப்படுபவர்.

Nuclear weapon: Any arm that derives its power from nuclear reactions. Nuclear weapons are significantly more powerful than conventional explosives. A single bomb is capable of destroying an entire city and causing massive environmental damage; அணு ஆயுதம் - ஒரு தனி அணு ஆயுதம் (குண்டு), ஒரு நகரத்தையே முற்று முழுதாக அழிக்கும் வல்லமை கொண்டது. மற்றும் மிகப் பாரிய அளவில் சுற்றுச்சூழலை சீரழிக்கக்கூடியது.

Organization for the Prohibition of Chemical Weapons (OPCW): The monitoring body of the Chemical Weapons Treaty whose mission it is to implement the provisions of the treaty; இரசாயன ஆயுதத்திற்கான/ஆயுத பாவனையை தடை செய்யும் அமைப்பு.

Pillage: The siphoning off of food intended for civilians. It is considered a war crime in international conflict and a prohibited act in an internal conflict. பொது மக்களுக்கான பொருட்களை (உணவு) போர்க்காலத்தில் கொள்ளையிடல் அனைத்துலக முரண்பாடுகளில் போர்க் குற்றமாகக் கருதப்படுகிறது மற்றும் உள் நாட்டுச் சண்டையில் தடைசெய்யப்பட்டுள்ளது.

Prisoner of war (POW): A person taken by or surrendering to enemy forces in wartime; போர்க்காலத்தில் எதிரிகளிடம் சரண் அடைந்தவர்கள் அல்லது எதிரிகளால் பிடித்துச் செல்லப்பட்டவர்கள்.

Rome Statute: Adopted on 17 July 1998 and entered into force on 1 July 2002, the statute established an independent permanent International Criminal Court in relation to the United Nations system, with jurisdiction over the most serious crimes of concern to the international community; ரோமபுரி சட்டம் - ஐ.நா வின் ஒழுங்குமுறையின் அடிப்படையில் சுயாதீன நிரந்தர, அனைத்துலக குற்றவியல் நீதிமன்றத்தினால், 17 யூலை 1998 அன்று பின்பற்றப்பட்டு, 1 யூலை 2002 அன்று பிரகடனப்படுத்தப்பட்டதே இந்தச் சட்டம் ஆகும். இந்தச் சட்டத்ததிற்கமைய அனைத்துலக சமூகத்துக்கு இடர் விளைவிக்கக் கூடிய மிகவும் பாரதூரமான குற்றங்களுக்கு தீர்ப்பு/நியாயம் வழங்கப்படும்.

Sovereignty: A territory that is completely independent and self-governed, existing as an independent state; அரசுரிமை அல்லது இறையாண்மை - ஒரு பிரதேசம்/ஆட்சிப் பகுதி முழுமையாக தனித்துவமாகவும், தன்னாட்சி அடிப்படையிலும் ஒரு தனி நாடாகுதல்.

Standard Minimum Rules for the Treatment of Prisoners: Non-legally binding guidelines for international and domestic law that established good practices in the treatment of prisoners and the management of prisons. The United Nations adopted the guidelines on August 30, 1955; அகதிகளை கையாளுவதற்கான குறைந்தபட்ச அடிப்படை விதிமுறைகள்.

Starvation: An illegal tactic of war meant to induce surrender by blocking humanitarian aid and/or normal commerce to a city or state; போர்த் தந்திரமாக, சட்டத்திற்கு புறம்பாக மனித நேய உதவிகளை ஒரு நகரத்திற்கோ அல்லது நாட்டிற்கோ தடைசெய்வது.

Violence against civilians: Wartime acts that harm civilians or civilian infrastructure; போர்க் காலத்தில் பொது மக்களுக்கு இழைக்கப்படும் துன்புறுத்தல்கள்.

கீழ் உள்ள தகவல்களை போரால் பாதிக்கப்பட்டோருக்கும் மனித உரிமைகளுக்குமான நடுவம் (Center for War Victims and Human Rights – CWVHR) வெளியிட்டுள்ளது. தேவை கருதி நாங்கள் இதனை இந்த கைநூலில் இணைத்துள்ளோம்.

## இலங்கைக்கான ஐ.நா. நிபுணர்குழுவும்

## மனித உரிமை மீறல்கள் தொடர்பான விசாரணையும்

- காலக்கெடு: 15 December 2010
- அனுப்பவேண்டிய முகவரி panelofexpertsregistry@un.org
- ஒருவர் ஒரு மின்னஞ்சல் மட்டுமே அனுப்பலாம்.
- 10 பக்கங்களுக்கு மேற்படாமல் இருத்தல் வேண்டும்.
- மின்னஞ்சலில் விசாரணையின் தேவையை வலியுறுத்தியும் மேலதிக தகவல் வேண்டின் உங்களை தொடர்புகொள்வதற்கான விபரங்களும் இருத்தல் வேண்டும்.
- நீங்கள் விரும்பின் போரால் பாதிக்கப்பட்டோருக்கும் மனித உரிமைகளுக்குமான நடுவத்திற்கு ஒரு பிரதி அனுப்புவதற்கான மின்னஞ்சல் un@cwvhr.org.
- மேலதிக தகவல் வேண்டின்

வலைத்தளம்: cwvhr.org

தொலைபேசி: 416-628-1408

மின்னஞ்சல்: dm@cwvhr.org

## இலங்கைக்கான ஐ.நா. நிபுணர்குழு என்றால் என்ன?

இந்தக்குழு இலங்கையில் நடந்த மோதலின் இறுதிப்பகுதியில் இடம்பெற்றதாகக் குற்றம் சாட்டப்படும் சர்வதேச மனித உரிமைகள், மனிதாபிமானச்சட்ட மீறல்கள் என்பவைக்கான பொறுப்புப்பற்றிய விடயங்கள் குறித்து ஐ.நா.செயலாளர் நாயகம் பான்கீ மூன் அவர்களுக்கு ஆலோசனை கூறுவதற்காக அமைக்கப்பட்ட மதியுரைஞர் குழுவாகும். இதற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரம் ஆலோசனை வழங்குவதாகும். அது இலங்கையைக் கட்டுப்படுத்தாது. இந்தக் குழுவினர் இலங்கைக்குள் நுழைவதற்கு இலங்கை அரசு அனுமதி மறுத்துள்ளது.

இந்த நிபுணர் குழுவில் யஸ்மின் சூகா, மார்சுகி டருஸ்மன், ஸ்ரிவன் ரற்னர் ஆகியோர் இடம்பெறுகின்றனர். திருமதி சூகா முன்பு தென்னாபிரிக்காவின் உண்மை, நல்லிணக்க ஆணைக்குழுவில் உறுப்பினராகப் பணிபுரிந்தவர். திரு.மார்சுகி இந்தோனேசியக்குடியரசின் சட்டவாளர்நாயகமாக 1999 - 2001 காலப்பகுதியில் கடமையாற்றியவர். இவர் இந்தோனேசியாவின் தேசிய மனித உரிமை ஆணைக்குழுவின் உறுப்பினராக இருந்தவர். ஐ.நா.வின் இரு உண்மைகாண் செயற்பாட்டிலும் பங்குபற்றியவர். பேராசிரியர் ஸ்ரிவன் ரற்னர் மிசிகன் பல்கலைக்கழக சட்டப்பள்ளியில் சட்டத்துறைப் பேராசிரியராக இருப்பவர்.

இந்த நிபுணர்குழு முதலில் 2010 யூன் 22இல் நியமிக்கப்பட்டது. அது தனது பணியை 2010 செப்ரெம்பரில் ஆரம்பித்தது. பொதுமக்களிடமிருந்து முறைப்பாடுகள் 2010 ஒக்ரோபர் நடுப்பகுதியில் கோரப்பட்டது. அதற்கான முடிவுத்திகதி 2010 டிசெம்பர் 15 ஆகும். இக்குழுவிற்கான நான்குமாதப் பதவிக்காலம் 2011 சனவரி நடுப்பகுதியில் முடிவடைகிறது.

## இந்தக்குழுவின் அதிகாரங்கள், அதன் எல்லைகள் என்ன?

பான்கீ மூனுக்கு ஆலோசனை கூறுவதே இக்குழுவின் பணியாகும். அதற்காக கலந்து பேசும் கடமையே கொண்டது. அதற்கு விசாரணை செய்து வழக்குத் தொடரும் அதிகாரம் இல்லை. ஐ.நா. செயலாளர் பான்கீ மூனுக்கு தனது சிபாரிசுகளை வழங்கும் நான்குமாத கால எல்லை கொண்டதாகும். அவர்கள் வெளியிட்ட ஊடக அறிக்கையில் அதன் அதிகார எல்லைகள் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது:

“இந்தக்குழுவினர் இலங்கையில் இடம் பெற்றதாகக் குற்றம் சாட்டப்படும் ஏதாவது சட்டமீறல்களின் இயல்புகள், அவற்றின் அளவுகளைக் கவனத்தில் கொண்டு அவற்றிற்கான பொறுப்பைத்

தீர்மானிக்கும் வழிமுறைக்கேற்பப் பிரயோகிக்கக்கூடிய சர்வதேசத் தராதரங்கள், ஒப்பீட்டு அனுபவங்கள் என்பவற்றை ஆராய்வர். இந்தக்குழு செயலாளர்நாயகத்திற்கு ஆலோசனை வழங்குவதற்கானது. அது விசாரணைசெய்யும் அல்லது உண்மைகாண் குழுவல்ல.''

## இந்த ஐ.நா. குழுவினருடைய, முறைப்பாடுகளை சமர்ப்பிப்பதற்கான வேண்டுகோள், என்பது என்ன?

ஐ.நா. நிபுணர்குழுவினர் எவரிடமிருந்தும் தமது விசாரணைக்குரியதான முறைப்பாடுகளைக் கோரியுள்ளனர். இதனை மின்னஞ்சல் மூலம் மட்டுமே, 2010 டிசெம்பர் 15ந்திகதிக்கு முன்பாக அனுப்பவேண்டும்.

## இந்தக்குழுவின் விசாரணையினால் எதிர்பார்க்கப்படும் விளைவுகள் என்ன?

இலங்கையில் இடம்பெற்றதாகக் குற்றம்சாட்டப்படும் மனித உரிமைமீறல்கள், போர்க்குற்றங்கள் பற்றி பக்கச்சார்பற்ற சர்வதேச விசாரணை இடம்பெறவேண்டுமென இக்குழுவினர் சிபாரிசு செய்யலாம். அல்லது அவர்கள் வெறுமனே இலங்கை அரசாங்கம் தனது மனித உரிமைக்கான பொறுப்புகளை எவ்வாறு மேம்படுத்தலாம் என்பதற்கான சிபாரிசுகளை வழங்கலாம்.

## ஐ.நா.குழுவுக்கான முறைப்பாடுகளை எவர் அனுப்பலாம்?

முறைப்பாட்டிற்கான அழைப்பில் அதற்கான குறிப்பிட்ட வடிவம் அல்லது வேறு கடுமையான நிபந்தனைகள் எவையும் இல்லை. அதில் விரும்பும்எவரும்மேற்குறித்தவிடயங்கள்பற்றியமுறைப்பாடுகளைப் பின்வருமாறு சமர்ப்பிக்கலாம் எனக்கூறப்பட்டுள்ளது. அதாவது தனியொருவர் அல்லது ஓர் அமைப்பு ஆகக்கூடியது 10 பக்கங்கள் கொண்ட முறைப்பாட்டினை 2010 டிசெம்பர் 15ம் திகதிக்குமுன்பாக அனுப்பவேண்டும். நேரடியாகப்பாதிக்கப்பட்ட தனிநபர்கள் அல்லது பாதிக்கப்பட்டவர்களின் உறவினர்கள் முறைப்பாடுகளைச் செய்யலாம். இலங்கையில் மனித உரிமை மீறல்கள் இடம்பெறுகின்றன என அறிந்த தனிப்பட்டநபர்களும் முறைப்பாடுகளை அனுப்பலாம். சமூக அமைப்புகள், ஊர்ச்சங்கங்கள், மாணவர்அமைப்புகள், சமய அமைப்புகள், மனித உரிமை அமைப்புகள் போன்றவையும் முறைப்பாடுகளை அனுப்பலாம்.

## ஐ.நா.குழுவிற்கு எப்படி முறைப்பாடுகளை அனுப்பலாம்?

நீங்கள் உங்கள் முறைப்பாடுகளை panelofexpertsregistry@un.org என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பலாம். ஊடக அறிக்கையில்

“நிபுணர் குழுவிற்கு அனுப்பப்படும் முறைப்பாடுகளின் இரகசியத்தன்மை பேணப்படும்” எனக்குறிப்பிடப்பட்டுள்ளது.

### தகவல்களை எப்போது சமர்ப்பிக்கலாம்?

அவற்றிற்கான முடிவுத்திகதி “2010 டிசெம்பர் 15” ஆகும்.

### எத்தகைய தகவல்களை ஐ.நா.நிபுணர்குழுவிற்குச் சமர்ப்பிக்க வேண்டும்?

பின்வரும் தகவல்களை அல்லது விடயங்களை நிபுணர்குழுவிற்கு அனுப்பும் முறைப்பாடுகளில் சேர்க்கலாம்:

- எப்படி உங்களது அல்லது உங்கள் உறவினரது மனித உரிமைகள் மீறப்பட்டன (கொல்லப்படல், ஊனமுறல், காணாமற் போதல், சித்திரவதை செய்யப்படல், தடுத்துவைக்கப்படல், பாலியல் வன்முறைக்கு உட்படல், வீடு, சொத்துகளை இழத்தல்).
- பக்கச்சார்பற்ற சர்வதேச விசாரணைக்கான தேவையை வற்புறுத்தல்.
- இலங்கையில், பக்கச்சார்பற்ற நீதிவிசாரணை இல்லை, உரிய நட்ட ஈட்டினை பெறுவதற்கான பொறிமுறைகள் இல்லை.
- முறைப்பாட்டை அனுப்பவர் தன்னுடன் தொடர்பு கொள்வதற்கான முகவரியைக் கொடுக்கவேண்டும்.

### எதற்காக நாம் ஐ.நா.குழுவிற்கு முறைப்பாடு செய்ய வேண்டும்?

இலங்கையினதும் அதன் ஆதரவு நாடுகளினதும் பலத்த எதிர்ப்பையும் மீறியே இந்தக்குழு நியமிக்கப்பட்டது. இலங்கை பற்றிய பக்கச்சர்பற்ற சர்வதேச விசாரணைக்கான தேவை இருக்கிறது. இந்தக்குழு அதற்கான சிபாரிசைச் செய்யும் சாத்தியம் உள்ளது. இக்குழுவின் சிபாரிசுகள் மேற்கு நாடுகள்மீதும், பிற அரசுகளின் மீதும் ஓர் அழுத்தத்தை ஏற்படுத்தலாம். இது முக்கியமான முதற்படியாகும். பாதிக்கப் பட்டவர்களும் ஏனைய தமிழர்களும் தேவையான தகவல்களை அவர்களுக்கு வழங்கி தமது பங்கினைச் செய்யவேண்டும். இக்குழுவினர் இலங்கைக்குச் செல்ல முடியாது என்பதினால் இது நமது விசேட கடமையாகிறது.

### எப்படி நாம் தமிழ் அமைப்புகளையும், தனிநபர்களையும், முறைப்பாடுகளைச் செய்யும்படி தூண்டலாம்?

தனிப்பட்ட தமிழ் மக்களும், தமிழ் அமைப்புகளும் முறைப்பாடுகளைச் செய்தல் அவசியம். தயவுசெய்து இதனை உங்களின் முக்கியமான, முதன்மையான கடமை எனக் கருதுங்கள்! இதுபற்றிய செய்திகளை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.

## தமிழரல்லாதவர்களின் அமைப்புகளையும், தமிழரல்லாத தனிநபர்களையும் முறைப்பாடுகளை அனுப்பும் படி எப்படி நாம் தூண்டலாம்?

நீங்கள், முக்கியமான மாணவர் அமைப்புகள், தொழிற்சங்கங்கள், மனித உரிமை அமைப்புகள், என்பனவற்றை முறைப்பாடுகளை அனுப்பும் படி தூண்டலாம். உங்களின் உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்கள், மாகாணநாடாளுமன்ற உறுப்பினர்கள், மத்தியநாடாளுமன்ற உறுப்பினர்கள் போன்றோரையும் எழுதும் படி கேட்கலாம்.

## கனடாவில் இந்தப்பணியை ஒருங்கமைத்து நெறிப்படுத்துவோர் யார்?

கனடாவில் இந்தத்திட்டம் “போரால் பாதிக்கப்பட்டோருக்கும் மனித உரிமை களுக்குமான நடுவம்” (CWVHR) அமைப்பினரால் ஒருங்கமைக்கப்பட்டு செயற்படுகிறது.

இதனை அரசியல் வேறுபாடின்றி, வேறுபல தமிழ் அமைப்புகளின் கூட்டுறவுடனும், ஒத்துழைப்புடனும் இவர்கள் செய்கின்றார்கள்.

## இந்த முறைப்பாடுகள் விடயத்தில் நான் எப்படி உதவ முடியும்?

- உங்களுடைய சொந்த முறைப்பாட்டை முதலில் செய்யுங்கள். பின்பு மற்றவர்கள் செய்வதற்கும் உதவி செய்யுங்கள்.
- ஊடகங்கள் [வானொலி/தொலைக்காட்சி/செய்தித்தாள்/இணையத்தளங்கள்/எழுத்தாளர்கள், கேட்போர், நிகழ்ச்சி நடத்தல் என்பவை மூலமாக உதவலாம்].

## பாடங்கள் படித்தல், நல்லிணக்க ஆணைக்குழு (LLRC) என்பது எதற்காக?

இலங்கை அரசினால் அமைக்கப்பட்ட “பாடங்கள் படித்தல், நல்லிணக்க ஆணைக்குழு” சுதந்திரமான அல்லது விசாரித்தறியும் ஆணைக்குழு அல்ல. இலங்கையில் பக்கச் சார்பான, வேறுபாடு காட்டும், தோல்வியடைந்த நீதித்துறையே உள்ளது. இந்த ஆணைக்குழுவும் அத்தகைய தன்மைகள் கொண்டதே. எல்லாப் பிரதான மனித உரிமை அமைப்புகளும் - சர்வதேச மன்னிப்புச்சபை, மனித உரிமைக்காப்பகம், நெருக்கடிகளுக்கான குழு உட்பட - அந்த ஆணைக்குழுவைக் கண்டித்து அதற்கு சாட்சியம் வழங்க மறுத்துள்ளன. எனவே இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள், மனித உரிமைமீறல்கள் பற்றிய “பக்கச்சார்பற்ற சர்வதேச விசாரணையே” நமக்குத் தேவையானதாகும்.

International Tamil Women Organisation

SWISS COUNCIL OF
EELAM TAMILS
சுவிஸ் ஈழத்தமிழரவை